

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (30.09.2024) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் 2022–23 மற்றும் 2023–24ஆம் ஆண்டுகளுக்கான மணிமேகலை விருதுகள் மற்றும் விருதுத் தொகையினை ஊரகம் மற்றும் நகர்ப்புரங்களில் சிறப்பாக செயல்படும் 40 சுய உதவிக் குழுக்கள், 10 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், 10 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், 2 வட்டார அளவிலான கூட்டமைப்புகள், 6 பகுதி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் 2 நகர அளவிலான கூட்டமைப்புகளுக்கு வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், தமிழச்சி தங்கபாண்டியன், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர் எம். மகேஷ்குமார், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி.ச.திவ்யதர்சினி, செயல் இயக்குநர் ஸ்ரேயா பி சிங், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், வங்கியாளர்கள், சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவவர்கள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (30.09.2024) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதாரத்தின் கீழ் செயல்படும் 516 சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 6,135 உறுப்பினர்களுக்கு 30.20 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்புகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சுகன்தீப் சிங் பேடி, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர் எம்.மகேஷ்குமார், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச.திவ்யதர்சினி, செயல் இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி.சிங், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், வங்கியாளர்கள், சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## எல்லாத் துறைகளிலும் – எல்லா திட்டங்களிலும்

# சமூக நீதி என்பதே திராவிட மாடல் அரசின் அடிப்படைக் கொள்கை!

## சிறந்த சுய உதவிக்குழுக்களுக்கு ‘மணிமேகலை விருது’ வழங்கி –

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சூளுரை!

**சென்னை,அக்.2 –**

**சென்னை, கலைவாணர் அரங்கத்தில் மாநில அளவிலான மணிமேகலை விருதுகள், வங்கியாளர் விருதுகள், நகர்ப்புற சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக்கடன் இணைப்புகள் வழங்கும் விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.**

**இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில், சிறப்பாக செயல்படுகின்ற மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு மணிமேகலை விருதுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கி, பாராட்டிப் பேசினார்.**

**அப்போது துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது : –**

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில், சிறப்பாக செயல்படுகின்ற மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, ஊராட்சி, பகுதி, வட்டார அளவிலான கூட்டமைப்புகளுக்கு `மணிமேகலை விருதுகள்’ மற்றும் சான்றிதழ்கள், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் 516 மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 135 சகோதரிகளுக்கு 31 கோடி ரூபாய் வங்கிக்கடன் இணைப்புகள், மகளிர் சுய உதவிக்குழுக்களுக்குச் சிறந்த முறையில் வங்கிக்கடன் இணைப்புகளை வழங்கி, ஊக்குவிக்கும், வங்கிகளுக்கான `சிறந்த வங்கியாளர் விருது’ ஆகியவற்றை, இந்தச் சிறப்பான நிகழ்ச்சியில் வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

### தானாகவே அமைந்துள்ளது!

தமிழ்நாட்டின் துணை முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின், நான் பங்கேற்கின்ற முதல் நிகழ்ச்சியே நம்முடைய மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்த சகோதரிகள் உங்களையெல்லாம் கௌரவிக்கின்ற நிகழ்ச்சியாக தானாகவே அமைந்துள்ளது.

ஏதாவது பட்டமோ பரிசோ கிடைத்தால், அதை முதலில் அந்தக் குழந்தை, தன் தாயிடம் சென்றுதான் காட்ட வேண்டும் என்று ஆசைப்படும். தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர் எனும் மாபெரும் பொறுப்பை ஏற்ற பின்பு, என்னுடைய தாய்கள், சகோதரிகள் உங்களை எல்லாம் சந்திக்க வந்து இருக்கிறேன்.

எனக்கு எல்லா வகையிலும் ஒத்துழைப்பு வழங்கி வரும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் அனைத்து நிலை அதிகாரிகள், அலுவலர்கள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த சகோதரிகள் அனைவருக்கும் எனது வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### ஊரக வாழ்வாதார இயக்கம்

தமிழ்நாட்டில் ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் கீழ், சுமார் 4 லட்சத்து 73 ஆயிரம் சுய உதவிக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. அதில், குறிப்பாக நமது திராவிட மாடல் அரசு பொறுப்புக்கு வந்த கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் 14 இலட்சத்து 91 ஆயிரத்து 985 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு லட்சத்து 25 ஆயிரத்து 750 புதிய மகளிர் சுயஉதவிக் குழுக்களை உருவாக்கி இருக்கின்றோம்.

இதிலிருந்தே மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு எந்த அளவு திராவிட மாடல் அரசு முக்கியத்துவம் கொடுத்து வருகிறது என்பதை நீங்கள் உணர்வீர்கள். இன்னொரு செய்தியைச் சொன்னால், மகளிர் மேம்பாட்டில் திராவிட மாடல் அரசுக்கு இருக்கும் அக்கறையை நீங்கள் தெரிந்துகொள்ளலாம்.

2011 முதல் 2021 வரை 10 ஆண்டுகள் அ.தி.மு.க-வின் ஆட்சி நடைபெற்றது. அந்த 10 ஆண்டுகளில் நமது மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 84 ஆயிரம் 815 கோடி ரூபாய் மட்டுமே வங்கிக்கடன் இணைப்பாக வழங்கப்பட்டது. ஆனால், நமது திராவிட மாடல் அரசு அமைந்த 2021-ஆம் ஆண்டு முதல் இந்த நாள் வரை 92 ஆயிரம் கோடி ரூபாய் கடன் இணைப்புகள் வழங்கி இருக்கிறோம்.



அ.தி.மு.க ஆட்சியில் 10 ஆண்டுகளில் வழங்கப்பட்ட கடன் இணைப்புத் தொகையைவிட அதிகமாக, நமது திராவிட மாடல் அரசு மூன்றே ஆண்டுகளில் வழங்கி இருக்கிறது. அதுமட்டுமல்ல, அ.தி.மு.க ஆட்சியில் `மணிமேகலை விருதுகள்’ தருவதையும் நிறுத்திவிட்டார்கள்.

### மிகச்சிறந்த எடுத்துக்காட்டு

நம் திராவிட மாடல் அரசு அமைந்த பிறகு தான், தற்போது மீண்டும் மணிமேகலை விருதுகளை, சிறப்பாக வழங்கிக் கொண்டிருக்கிறோம். இதுதான், மகளிர் முன்னேற்றத்தில் நம் திராவிட மாடல் அரசுக்கு இருக்கும் அக்கறைக்கு ஒரு மிகச்சிறந்த எடுத்துக்காட்டு. பெண்களுக்கு சமூகவிடுதலையும் வேண்டும், அதே நேரத்தில் பொருளாதார விடுதலையும் வேண்டும் என்று ஏறத்தாழ 100 ஆண்டுகளுக்கு முன்பே குரல் கொடுத்தவர், நம் தந்தை பெரியார் அவர்கள். அவரின் வழியில் பெண்கள் முன்னேற்றத்திற்கு உதவும் நோக்கில் அடுக்கடுக்கான திட்டங்களை, இந்த திராவிட மாடல் அரசு மூன்று ஆண்டுகளில் செயல்படுத்தியுள்ளது.

நம் அரசு பொறுப்பேற்றப் பிறகு நடத்தப்பட்ட உள்ளாட்சித் தேர்தலில் மகளிருக்கு 50 சதவிகிதம் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது. இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் மாநகரங்களில் பெண் மேயர்கள், நகராட்சிகளில் பெண் தலைவர்கள், ஊராட்சித் தலைவராக ஆயிரக்கணக்கான பெண்கள் பொறுப்பில் இருக்கிறார்கள். அதற்கு நம் கழக அரசும், நம் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களும்தான் மிகமிக முக்கியமான காரணம்.

காலையில் எழுந்து குழந்தைகளுக்கு உணவு கொடுப்பதற்காக மகளிர் சமைப்பதற்கு சிரமப்படக்கூடாது என்று தமிழ்நாடு முழுவதும் காலை உணவுத் திட்டத்தை இந்தியாவிலேயே முதன்முறையாக அறிமுகம் படுத்தினார்.

### இந்தியாவிலேயே முதன்முறை

தமிழ்வழியில் பள்ளிப்படிப்பு படித்து கல்லூரிக்குச் செல்லும் மாணவிகளுக்கு `புதுமைப் பெண்’ திட்டம் மூலம் மாதம் 1,000 ரூபாய் கல்வி உதவித்தொகைத் திட்டத்தையும் உங்களுக்காக முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

மகளிருக்கான கட்டணமில்லாப் பேருந்து பயணத் திட்டம். பெண்கள் வீட்டை விட்டே வெளியே வரக்கூடாது என்று 100 ஆண்டுகளுக்கு முன்பு சொல்லிக்கொண்டு இருந்தார்கள். அந்த நிலையை மாற்றியது நம் திராவிட இயக்கம்தான். நம் திராவிட முன்னேற்றக் கழக அரசு, பெண்களை, மேலும் ஊக்கப்படுத்தும் விதமாகவும், அவர்களுடைய பயணத்திற்கு துணைநிற்கும் விதமாகவும், மகளிருக்குக் கட்டணமில்லா பேருந்துப் பயணத் திட்டத்தைச் செயல்படுத்தியது.

முதலமைச்சராகப் பொறுப்பேற்ற முதல் நாளே மகளிருக்கு கட்டணமில்லாப் பேருந்துப் பயணத் திட்டத்தில் நம் முதலமைச்சர் அவர்கள் கையெழுத்திட்டார்.

அடுத்தது, கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம்! ஒவ்வொரு குடும்பத்திலும் பெண்கள் உழைக்கிறார்கள், குடும்பத்தைப் பராமரிக்கிறார்கள். ஆனால், அவர்களுடைய உழைப்புக்கென்று எந்த ஒரு அங்கீகாரமும் இருந்ததில்லை.

ஆனால், ஒரு குடும்பம் சிறந்து விளங்குவதற்கு பெண்கள்தான் முதுகெலும்பாய் இருக்கிறார்கள். பெண்களுடைய உழைப்பை அங்கீகரித்து, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் மூலம் நம் முதலமைச்சர் அவர்கள் மாதம் 1,000 ரூபாய் வழங்க உத்தரவிட்டார். இந்த ஓராண்டில் ஒரு கோடியே 16 லட்சம் மகளிருக்கு மாதம் 1,000 ரூபாய் கலைஞர் உரிமைத் தொகை திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டங்களின் தாக்கம் எப்படிப்பட்டதாக இருக்கிறது என்று பல்வேறு பொருளாதார ஆய்வாளர்கள் இப்போது ஆய்வுசெய்யத் தொடங்கி இருக்கிறார்கள். இந்தியாவிலேயே மகளிர் மேம்பாட்டிற்கு எடுத்துக்காட்டான மாநிலமாக நம் தமிழ்நாடு திகழ்கிறது என்றால், அதற்காக உங்கள் அனைவரையும் நான் பாராட்ட வேண்டும்.



**பெண்களுக்கு சமூகவிடுதலையும் வேண்டும், அதே நேரத்தில் பொருளாதார விடுதலையும் வேண்டும் என்று ஏறத்தாழ 100 ஆண்டுகளுக்கு முன்பே குரல் கொடுத்தவர், நம் தந்தை பெரியார் அவர்கள். அவரின் வழியில் பெண்கள் முன்னேற்றத்திற்கு உதவும் நோக்கில் அடுக்கடுக்கான திட்டங்களை, இந்த திராவிட மாடல் அரசு மூன்று ஆண்டுகளில் செயல் படுத்தியுள்ளது.**

### சுயஉதவிக் குழுக்கள்

திராவிட மாடல் அரசைப் பொறுத்தவரை, எல்லா துறைகளிலும் எல்லா திட்டங்களிலும் சமூக நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்பது தான் எங்களின் அடிப்படைக் கொள்கை. அதன்படி, எல்லா வகையிலும் ஒடுக்கப்பட்டிருக்கும் பெண்கள் மேலே எழுந்து வர வேண்டும் என்ற நோக்கத்தில்தான் இந்த அத்தனைத் திட்டங் களும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பெண்கள் தொழிலதிபர்களாக வர வேண்டும் என்று எல்லா வகையிலும் அக்கறையோடு இந்த அரசும், நம் முதலமைச்சர் அவர்களும் செயல்பட்டு வருகிறார். இந்த ஆண்டு சுய உதவிக் குழுக்களுக்கு 35 ஆயிரம் கோடி ரூபாய் வங்கிக்கடன் இணைப்பு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டைப் போலவே, இந்த ஆண்டும் இலக்கைவிட, அதிக அளவு கடன் வழங்கி சாதனை படைப்போம் என்கிற நம்பிக்கையுடன் செயல்பட்டு வருகிறோம். எனவே, மகளிர் சுய உதவிக்குழுக்களைப் பாராட்டி ஊக்கப்படுத்துவதை நாம் கடமையாகக் கருது கிறோம்.

அந்த வகையில், சிறப்பாகச் செயல்படும் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு மணிமேகலை விருது வழங்கி பாராட்டப்படவுள்ளது. இந்த ஆண்டுக்கான விருது, பழங்குடியின இருளர் இன சகோதரிகளை உறுப்பினர்களாகக் கொண்ட கோயம்புத்தூர் மாவட்டம், கொடியூர் சிறப்பு கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தில் இணைந்துள்ள சுய உதவிக் குழுக்களுக்கு மணிமேகலை விருதினை வழங்குகிறோம். அவர்களுக்கு நம் அனைவரின் சார்பாக பாராட்டுகளையும், கைதட்டல்களையும் தெரிவிப்போம்.

### மணிமேகலை விருது

கிருஷ்ணகிரி மாவட்டம், ராயக்கோட்டை பாஞ்சாலி நகரைச் சேர்ந்த `விதைகள்’ திருநங்கை சுயஉதவிக் குழுவைச் சேர்ந்த சகோதரிகளுக்கும் இந்த ஆண்டுக்கான மணிமேகலை விருதினை வழங்கி பாராட்டுகிறோம்.

கடந்த 23 ஆண்டுகளாக குழுவினை ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் நடத்தி வரும், ஈரோடு மாவட்டம், கோபிச்செட்டிப்பாளையம், பொலவக்காளிப்பாளையம் `செம்மலர்’ சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த சகோதரிகளும் மணிமேகலை விருதினைப் பெறுகிறார்கள்.

பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறையில் இருந்து, அவர்களைப் பாதுகாத்து, சட்ட உதவிகளைச் செய்து பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் முன்னின்று செயல்படும், கெங்கவல்லி பாலின வள மையத்தை, செயல்படுத்தி வரும் கூட்டமைப்புக்கும் `மணிமேகலை விருது’ இன்று வழங்கப்படுகிறது.

இந்தப் பட்டியலைப் பார்க்கும்போதே, மனதில் மிகுந்த மகிழ்ச்சியும் உற்சாகமும் பிறக்கிறது. இந்தப் பட்டியலே மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் முயற்சிகளுக்குக் கிடைத்த வெற்றியைக் காட்டுகிறது.

இந்த ஆண்டுக்கான விருதினைப் பெறும், சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த சகோதரிகளுக்கும், வங்கிக்கடன் வழங்கிய வங்கியாளர்களுக்கும் எனது பாராட்டினையும், வாழ்த்துகளையும் தெரிவித்து, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே. சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதிமாறன், தமிழச்சி தங்கபாண்டியன், கலாநிதி வீராசாமி, ஊரக வளர்ச்சித் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி ஐ.ஏ.எஸ்., சென்னை மாநகராட்சி மேயர் பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் அரவிந்த் ரமேஷ், தாயகம் கவி, காரம்பாக்கம் கணபதி, வெற்றியழகன், பிரபாகர் ராஜா, மயிலை த.வேலு, ஜோசப் சாமுவேல், பரந்தாமன், துணை மேயர் மகேஷ்குமார், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் திவ்யதர்ஷினி ஐ.ஏ.எஸ்., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன செயல் இயக்குநர் ஸ்ரேயா சிங் ஐ.ஏ.எஸ்., மாநில வங்கியாளர் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மோகன் மற்றும் அரசு அதிகாரிகள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன அலுவலர்கள், சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்த ஏராளமான பெண்கள் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.